# பாரதி வித்யாலயா மேல்நிலைப் பள்ளி

## திருப்புதல் தேர்வு -2

வகுப்பு : 12 ( இயல் - 6 & 7 ) BATCH - I மதிப்பெண் : 90

பாடம் : தமிழ் நேரம் : 1.30 மணி

**I.பலவுள் தெரிக : 14 x 1 = 14**

1. நாடகத்தை --- கலை என்பர்.

அ) ஒற்றைக் கோணக்கலை ஆ) முப்பரிமாணக்கலை இ) நாடகக்கலை ஈ) இசைக்கலை

2. தலைக்கோல் பட்டம் பெற்றவள்

அ) கண்ணகி ஆ) மாதவி இ) நர்த்தகி ஈ) மேகலை

3. சொற்கேட்டார்க்குப் பொருள் கண் கூடாதல் என்று கூறியவர்

அ) தொல்காப்பியர் ஆ) பவணந்தியர் இ) பேராசிரியர் ஈ) மயிலைநாதர்

4. 16 நரம்புகளைக் கொண்டது

அ) பேரியாழ் ஆ) மகரயாழ் இ) சகோடயாழ் ஈ) செங்கோட்டியாழ்

5. ஆமந்திரிகை என்பது

அ)வலக்கை வாத்தியம் ஆ)இடக்கை வாத்தியம் இ)ஆடல் மகளிர் ஈ)இசைக்கருவி வாசிப்போர்

6. சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும் என்று பாடுபவர்

அ) பாரதிதாசன் ஆ) பாரதி இ) கவிமணி ஈ) இராமலிங்கனார்

7. காட்சிகளை மாற்றி மாற்றி வைப்பதன் மூலம் வெவ்வேறு காட்சிகளை உருவாக்கிக் காட்ட முடியும் இதனை------

அ) குலஷோவ் விளைவு ஆ) காட்சி உதயம் இ) காட்சி மறைவு ஈ) படத்தொகுப்பு

8. சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதை அமைந்துள்ள காண்டம்

அ) புகார் காண்டம் ஆ) மதுரை காண்டம் இ) வஞ்சிக்காண்டம்

9. பலர் துஞ்சவும் தான் துஞ்சான் - இவ்வடிகள் இடம் பெறும் நூல்-----

அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) நற்றினை ஈ) குறுந்தொகை

10. இரண்டு முறை ஒருவன் ஒரே நதியில் இறங்க முடியாது என்றவர் ----

அ) சாப்ளின் ஆ) ஷேக்ஸ்பியர் இ) ஹிராக்ளிடஸ் ஈ) டைமண்ட்

11. நடுகல் , கையறு நிலை போற்றவைப் பற்றிக் கூறும் நூல்

அ) அகநானூறு ஆ) குறுந்தொகை இ) நற்றிணை ஈ) புறநானூறு

12. நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும் எனப் பாடும் நூல் ----

அ) சிலப்பதிகாரம் ஆ) பட்டினப்பாலை இ) எட்டுத்தொகை ஈ) மணிமேகலை

13. 126 ஒற்றை வரிகளில் எழுதப்பட்ட நூல் ------

அ) துளிகள் ஆ) உள்ளொளி இ) போதகம் ஈ) ஆன்மீகம்

14. இருபத்து நால்விரல் ஆக என்பது எத்தனை அடி

அ) 28 ஆ) 32 இ) 14 ஈ) 4

**II. எவையேனும் மூன்றனுக்கு விடையளி: 3x 2 = 6**

15. *ஒருமுக எழினி, பொருமுக எழினி – குறிப்பு எழுதுக.*

16. *எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?*

17. *வறுமையும் சிறுமையும் தருவது எது?*

18. *பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?*

**III. எவையேனும் இரண்டனுக்கு விடையளி: 2x 2 = 4**

19. *அறிவுடை வேந்தனின்நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?*

20. *செவியறிவுறூஉ துறையை விளக்குக.*

21. *பருவத்தே பயிர் செய் – நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.*

**IV. எவையேனும் ஏழனுக்கு விடையளி: 7x 2 = 14**

**22. இலக்கணக் குறிப்பு எழுதுக:** அ) *அறியா* ஆ) *காய்நெல்*

**23. உறுப்பிலக்கணம் எழுதுக :** அ) *அறிந்து* ஆ) *அறுத்து*

**24. புணர்ச்சி விதி எழுதுக :** அ) *தலைக்கோல்* ஆ) *ஒருமையுடன்*

**25. தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக**

அ) *ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.*

ஆ) *வனவிலங்குக் காப்பக த்தில் சிங்கக் குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.*

**26. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க** அ) *உழை - உளை.* ஆ) *களம், கலம்.*

27. *பாவிகம் – விளக்குக.*

28. *தொன்மம் – விளக்கம் தருக.*

29. *காப்பியச் சிற்றுறுப்புகள் சிலவற்றை எழுதுக.*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**V. எவையேனும் இரண்டனுக்கு விடையளி:** **2 x 4 = 8**

30. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தைஎழுதுக.

31. யானைபுக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே– உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

32. அறிவின் மேன்மைபற்றித் திருக்குறள் வழி நீவிர் கருதுவன யா வை?

**VI.எவையேனும் இரண்டனுக்கு விடையளி :** **2 x 4 = 8**

33. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக

34. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

35. காப்பியச் சிற்றுறுப்புகள் சிலவற்றை எழுதுக.

**VII.எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 x 4 = 12**

36 . அகலாது அணுகாது தீக்காய்வார் போல்கஇகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியைவிளக்குக.

37. எடுத்துக்காட்டு உவமையணியைவிளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப்பொருத்தி எழுதுக. துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும் நஞ்சுஉண்பார் கள்உண் பவர்

**38. இலக்கிய நயம் பாராட்டுக.( நான்கு நயங்கள்) எழுதுக.**

பிறப்பினால் எவர்க்கும் – உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் – நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார் !
தின்மை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார் !

- கவிமணி தேசிக விநாயகம்

**VIII. இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3x 6 = 18**

39. அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக. (அல்லது)

40. எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன – நிறுவுக.

41. திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக. (அல்லது)

42. நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

43. சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? – விளக்குக. (அல்லது)

44. மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

**IX. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **3+ 3 = 6**

45. "குழல்வழி " எனத் தொடங்கும் சிலப்பதிகாரம் பாடலை எழுதுக.

46. "*காய்நெல் " எனத் தொடங்கும் புறநானூறு பாடலை எழுதுக.

****** வாழ்த்துகள் ******

**C.VIJAYAKUMAR (PG ASST),**
**BHARATHI VIDHYALAYAMAT.HR.SEC.SCHOOL,**
**GOBICHETTIPALAYAM , CELL:7418693519**

www.Padasalai.Net